# APRIL - 1990

318

## M.D. (Siddha) DEGREE EXAMINATION, APRIL 1990

Branch — Maruthuvam

## GUNAPADAM AND ITS BRANCHES

(Including Herbal Botany)

Time : Three hours | Maximum : 100 marks

Answer ALL the questions.

1. (அ) "கோழையறுக்கி" எனக் கூறப்படும் கடைச்சரக்கு எது? அதன் செய்கைகள், பயன்படும் முறைகள் முதலியவற்றை விளக்கி வரைக.

   (ஆ) புகையிலையைக் கொண்டு செய்யப்படும் சுண்ணம் எது? அச் செய்முறையையும் அதன் பயனையும் எழுதுக. (20)

2. சாம்பிராணிப் பதங்கம், சௌபாக்கிய சுண்டி, நத்தைச் சூரித் தைலம், பரங்கிப்பட்டை இலேகியம், மிளகுத் தைலம், இவற்றின் செய்முறை, பயன்கள் - இவற்றை எழுதுக. (20)

3. உலோகங்களில் "வாதத்திற்கு உயிர்" என்பது எது? அதன் இயற்கைப் பண்புகள், வகை, குணம், நட்பு பகைச் சரக்குகள், செய்கை முதலியவற்றை எழுதுக. (20)

4. சிலைத் தைலம், நவநீத பற்பம், பூநாகச் சத்து, மெழுகுக் களிம்பு, பசகரைச் செந்தூரம் — இவற்றின் செய்முறை, பயன்படும் விதம் இவற்றை விவரி. (20)

5. <u>அமுதவல்லி</u> யுப்புடனே யாக்கியமையான
   <u>கடலெழு</u> மாமைமதி கல்.
   கோடிட்ட பொருட்களின் மருத்துவ பயன்களை விவரி. (20)

## APRIL - 1992

439

M.D. (Siddha) DEGREE EXAMINATION, APRIL 1992.

First Year

Branch II — Gunapadam

Paper II — MARUTHUVAM AND ITS ALLIED BRANCHES

*Time : Three hours.* *Maximum : 100 marks.*

### மருத்துவம் (பொது)

1\. (அ) அதிசாரம், கிரகணி, கடுப்புக் கழிச்சல் நோய்களை அவை தோன்றக் காரணங்கள், குறிகுணங்கள் ஆகியவற்றைக் கொண்டு எவ்வாறு பிரித்தறிவீர்? நவீன மருத்துவ முறையுடன் ஒப்பிட்டு எழுதி ஒவ்வொன்றிற்கும் சிறப்புப் பரிகார முறைகளைக் கூறுக. (15)

(ஆ) குரல்கம்மல் நோயின் இயல், நோய்வருவழி, குறிகுணங்கள், தீரும் தீராதவை, நோய் கணிப்பு ஆகியவற்றை நவீன மருத்துவ முறையுடன் ஒப்பிட்டு எழுதி, சிகிச்சை முறையையும் கூறுக. (10)

### மருத்துவம் (சிறப்பு)

2\. வெண்குட்ட நோயின் இயல், நோய்க் காரணங்கள், நோய்க் கணிப்பு, தீரும் தீராதவை ஆகியவற்றை நவீன மருத்துவம், மற்ற இந்திய மருத்துவமுறைகளுடன் ஒப்பிட்டு எழுதி பரிகாரம், பத்தியம் ஆகியவற்றை விரிவாக எழுதுக. (20)

### அறுவை மருத்துவம்

3\. (அ) சஞ்சார நோய்களுள் சிறப்பானவைகள் எவற்றைக் கூறி, ஏதாவது ஒன்றின் இயல், நோய்க்காரணங்கள், முற்குறிகள், குறிகுணங்கள், ஆகியவற்றை நவீன மருத்துவ முறையுடன் ஒப்பிட்டு எழுதி பரிகாரம், பத்தியம் கூறுக. (15)

(ஆ) அண்டநோய்களின் வகைகளைக் கூறி, அவற்றின் இயல், நோய் தோன்றும் வழி, குறிகுணங்கள், மருத்துவம் ஆகியவற்றை விளக்குக. (15)

### தோல் மருத்துவம், மகளிர் மருத்துவம், பிள்ளைப்பிணி மருத்துவம்.

4\. (அ) கணை நோயின் வகைகள், நோய்க்காரணங்கள், குறிகுணங்கள் ஆகியவற்றை நவீன மருத்துவ முறையுடன் ஒப்புநோக்கி ஆய்ந்து எழுதுக. பரிகாரம், தீரும் தீராதவை ஆகியவற்றை எழுதுக. (15)

(ஆ) கரு உற்பத்தி பற்றிய சித்தர் கொள்கைகளுடன் நவீன மருத்துவக் கொள்கைகளை ஒப்பிட்டு விளக்குக. (10)

## APRIL - 1995

[SR 341]

M.D (Siddha) DEGREE EXAMINATION

First Year

Branch I — Maruthuvam

Paper II — GUNAPADAM AND ITS BRANCHES

(Including Herbal Botany)

Time : Three hours Maximum : 100 marks

Answer ALL questions.

1. மூலிகைச் சரக்குகளில் செய்யப்படும் கலப்படம் பற்றியும் அதனைக் கண்டு தெளிதல் பற்றியும் விளக்குக. (20)

2. அபினி, கஞ்சா, நேர்வாளம், நாபி, வசம்பு இவற்றின் சுத்தி முறைகளை விளக்குக. (15)

3. மருந்துகளின் வழங்கும் முறை (Mode of Administration, Route of Administration) பற்றி சித்தர் வழிநின்று விளக்குக. (15)

4. மூலிகை நஞ்சு, உலோக நச்சுத்தன்மை இவை பற்றிய தீவிரக் குறிகுணங்களை விளக்குக. (15)

5. மகாவல்லாதி லேகியம், பரங்கிப்பட்டைப் பதங்கம், சண்டமாருதம், சாதிசம்பீரக் குழம்பு இவற்றின் செய்முறையையும் பயன்படும் முறையையும் விளக்குக. (20)

6 சிறு குறிப்பு வரைக : (3×5=15)

(அ) வால்ரசம்

(ஆ) அயநாகம்

(இ) லோகமாரணம்

## NOVEMBER - 1995

[MB 342]

### M.D. (SIDDHA) DEGREE EXAMINATION.

(Old/New Regulations)

First Year

Branch I --- Maruthuvam

Paper II --- GUNAPADAM AND ITS BRANCHES

(Including Herbal Botany)

Time : Three hours Maximum : 100 marks

Answer ALL questions.

1. அன்னிய செலவாணியை ஈட்டும் தென்னிந்திய தாவரங்கள் ஐந்தை ஆய்வு செய்க. (15)

2. தொழுநோய், காளாஞ்சகப் படை இந்நோய்களைக் குணப்படுத்தும் மும்மூன்று மூலிகைகளை அதனால் செய்யப்படும் மருந்தை எவ்விதம் தயாரித்து, பயன்படுத்தும் முறையையும் தெளிவுபடுத்துக. (15)

3. சிறு குறிப்பு வரைக : (20)

(அ) தைல வகை (ஆ) அருகம்புல் (இ) மருந்துகளின் ஆயுட்காலம் (ஈ) சிறுகண் பீளை

4. மூலிகைகளை தோற்றுவித்தோர் யாவர்? அவற்றின் காரணப் பெயர்களையும், பஞ்சபூதங்களின் பண்பு கொண்ட [illegible] மூலிகைகளையும், வழிபாட்டு நிலையங்களில் விநியோகிக்கும் மூன்று மூலிகைகளையும் அவை நிவர்த்திக்கும் முத்தோடங்களையும் விவரிக்கவும். (15)



5. முக்கனிகள் யாவை? அவற்றின் குணங்கள், திரிதோட வேறுபாடுகளை விவரி. மருத்துவம் முக்கியத்துவத்தினை விவரி. (15)

6. செம்பைச் செந்தூரிக்கக் கூடிய மூலிகைகள் மூன்றை எழுதி அவை இந்தியாவில் கிடைக்கும் இடங்களையும், அங்க அமைப்பையும் படத்துடன் விவரி. (20)

Mention the name of three plants used as Copper Oxidisers. Draw diagram and describe their distribution and their Morphology.

# APRIL - 1998

SV 249

M.D. (SIDDHA DEGREE EXAMINATION

Branch I - Marutthuvam
Branch III - Sirappu Marutthuvam
Branch IV - Kuzhandhai Marutthuvam

Paper III - GUNAPAADAM AND ITS BRANCHES
(INCLUDING HERBAL BOTANY)

Time: Three hours                                        Max.marks:100

Answer All Questions

1. லெகுமினோசே (Leguminosae ) குடும்பத்தைச் சேர்ந்த மூலிகைகளின் பெயர் மூன்றினை குறிப்பிட்டு, அதன் தாவரவியல் பெயர், அதிலுள்ள சத்துப் பொருளின் பெயர் (Alkaloid etc. ), அதன் மருத்துவ குணம், அவை சேரும் ஏதாவதொரு மருந்தின் பெயர், செய்முறை விவரி. (15)

2. வெடியுப்பின் வேறுபெயர், சுத்தி முறை, செய்கை, பொது குணம், உபயோகம் ஐந்து - இவற்றினை கூறி வெடியுப்புச்சுண்ணம் செய்முறை, அளவு, தீரும் நோய்களை விளக்குக. (15)

3. (அ) கொடிவேலி, கத்திரிவல்லி, நாகவல்லி, பொன்னவல்லி - என்பவை யாவை. (5)

ஒவ்வொன்றைக் கொண்டும் செய்யப்படும் மருந்துகள் இரண்டின் பெயர்களைக் கூறி, ஒவ்வொன்றிலும் ஒரு செய்முறை, தீரும் நோய் - இவைகளை விவரி. (15)

4. சிறுகுறிப்பு வரைக:
   (அ) உருக்கு குகை
   (ஆ) அயவீரச் செந்தூரம்
   (இ) ஏட்டுக் குழம்பு (15)

5. (அ) அவுரி, உத்தாமணி, செம்பருத்தி - இவைகளின் செய்கையை கூறி, அச்செய்கைகளுக்கு இவற்றினை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதனை விவரி. (10)

   (ஆ) கல்லாதி மெழுகு செய்முறையை விளக்குக. (5)

6. (அ) சவ்வீரம் வேறு பெயர், சுத்தி முறை, செய்கை, பொது குணம், இவற்றை கூறி, வெள்ளை மாத்திரை செய்முறையை கூறுக. (15)

   (ஆ) [illegible] கூடு குடிநீர் செய்முறை, தீரும் நோய்களை விளக்குக. (5

**OCTOBER - 1999**

**[KA 503]**

M.D. (Siddha) DEGREE EXAMINATION.

First Year

Branch I — Maruthuvam

Branch III — Sirappu Maruthuvam

Branch IV — Kuzhandhai Maruthuvam

Paper III — GUNAPAADAM AND ITS BRANCHES

(Including Herbal Botony)

Time : Three hours — Maximum : 100 marks

1. கோழையகற்றி, வாதமகற்றி, தாதுவெப்பகற்றி செய்கைகளை விளக்கி ஒவ்வொன்றிற்கும் மூன்று மூலிகைப் பொருட்களைக் கூறி அவை அச்செய்கைக்காக பயன்படும் விதத்தை விளக்குக. (20)

2. தொழுநோயை குணப்படுத்தும் மூலிகைகள் நான்கினை எழுதி அவைகளில் காணப்படும் உயிர்ச் சத்துக்கள் யாவை? அவைகள் இந்தியாவில் எங்கு கிடைக்கின்றன என்பதனையும் எழுதுக. அவற்றில் ஒன்றிற்கு அங்க அமைப்பை எழுதுக. (15)

3. சர்வ விடதாரி குளிகை, சேரங்கொட்டை நெய் — இவற்றின் செய்முறைகளை விளக்கி, அளவு தீரும் நோய்களை எழுதுக. (20)

4. சிறு குறிப்பு வரைக : (15)

(அ) இயற்கை உலோகம், செயற்கை உலோகம்

(ஆ) பஞ்ச கல்லான குகை

(இ) புடத்தின் வகைகள்.

5. நாகச் செந்தூரம் செய்முறை அளவு தீரும் நோய்கள் எழுதுக. (15)

6. தாளகத்தின் வேறுபெயர், வகைகள், சுத்தி முறை, செய்கை, பொது குணம் இவற்றைக் கொண்டு செய்யப்படும் மருந்துகள் இரண்டினைக் கூறி விளக்குக. (15)

**APRIL - 2000**

**[KB 503]**

M.D. (SIDDHA) DEGREE EXAMINATION.

First Year

(Old/New Regulations)

Branch I — Maruthuvam

Branch III — Sirappu Maruthuvam

Paper III — GUNAPADAM AND ITS BRANCHES

(Including Herbal Botany)

Time : Three hours — Maximum : 100 marks

## SECTION A

## (GUNAPADAM)

1. அகட்டுவாய் வகற்றி, உடற் தேற்றி, எரு இளக்கி செய்கைகளை விளக்கி ஒவ்வொன்றிற்கும் மூன்று மூலிகைப் பொருட்களைக் கூறி அவை அச்செய்கைக்காக பயன்படும் விதத்தை விளக்குக. (15)

2. கண் நோயை குணப்படுத்தும் மூலிகைகள் நான்கினை எழுதி அவை பயன்படும் விதத்தை விளக்குக. (15)

3. அப்பிரக பற்பம் செய்முறை, அளவு, தீரும் நோய்கள் விவரி. (20)

4. மண்டூரத்தின் வேறு பெயர், சுத்தி முறை, செய்கை, பொது குணம் இவற்றை கொண்டு செய்யப்படும் மருந்துகள் ஐந்தினைக் கூறுக. (20)

## SECTION B

## (HERBAL BOTANY)

5. மூலிகை இன மூலப் பொருட்களின் தர நிர்ணயம் பற்றிக் கூறி மூலிகை இன மூலப் பொருட்களில் கலப்படமும், கலப்படத்தைக் கண்டுபிடித்தலும் பற்றி விளக்கி எழுதுக. (15)

6. ஏதேனும் மூன்றிற்கு சிறு குறிப்புத் தருக : (15)

(அ) கிளைக்கோசைடுகள் (Glycosides)

(ஆ) கிருமிக் கொல்லி மருந்துகள் (Antibiotics)

(இ) கரிசாலை வகைகள் (Karisalai types)

(ஈ) அரத்தை வகைகள் (Galangal types).

**OCTOBER - 2000**

[KC 503]

**M.D. (SIDDHA) DEGREE EXAMINATION**

**First Year**

**(Old/New Regulations)**

**Branch I — Maruthuvam**

**Branch III — Sirappu Maruthuvam**

**Branch IV — Kuzhandhai Maruthuvam**

**Paper III — GUNAPADAM AND ITS BRANCHES**

**(Including Herbal Botany)**

Time : Three hours — Maximum 100 marks

## SECTION A

## (GUNAPADAM)

1. சீதக் கழிச்சலடக்கி, துவர்ப்பி, வெப்ப சக்தி செய்கைகளை விளக்கி ஒவ்வொன்றிற்கும் மூன்று மூலிகை பொருட்களைக் கூறி அவை அச்செய்கைக்காக பயன்படும் விதத்தை விளக்குக. (15)

2. நீரிழிவு நோயை குணப்படுத்தும் மூலிகைகள் நான்கினை எழுதி அவை பயன்படும் விதத்தை விளக்குக. (15)

3. இரசபற்பம் செய்முறை அளவு அனுபானம் தீரும் நோய்கள், மகிமை — விவரி. (20)

4. வெள்ளி உரம், தங்க உரம் செய்முறை அளவு, அனுபானம், தீரும் நோய்கள் — விவரி (20)

## SECTION B

## (HERBAL BOTANY)

5. வெண்குட்டம் நோயைக் குணமாக்கும் மூலிகைகளின் தாவரவியல் பெயர், தமிழ்ப் பெயர், வளருமிடம், குடும்பம் பயன்படும் பாகம், வெளித் தோற்றப் பண்புகள், நுகரும் பண்புகள் மற்றும் அவைகளிலுள்ள தாவர வேதிப் பொருட்கள் பற்றி விளக்கமாக எழுதுக. (15)

6. ஏதேனும் மூன்றிற்கு சிறு குறிப்பு எழுதுக :

(அ) ஆல்கலாய்டுகள் (Alkaloids)

(ஆ) டானின்கள் (Tannins)

(இ) கொழுப்பு எண்ணெய் (Fixed oil)

(ஈ) கொடிவேலி வகைகள் (Plumbago types) (15)